# ஞானகுருவின் படைப்புக்கள்

## "அனைத்து மதங்களையும் இணைக்கும் வல்லமை சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குத்தான் உண்டு!"

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு <u>43,73,121</u> **வைகாசி** மாதம்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"இந்துமத அருட்பேரரசு உருவான உண்மை வரலாற்றின் ஆரம்பம்"** - 31-01-1986இல் குருதேவர் அவர்கள் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு இயக்கம் வளரக் கூடிய விதம் பற்றி எழுதிய அஞ்சல்.
2. **"அருளைப் பொருளுக்கு விற்பவரல்ல நாம்!"** - 31-01-1986இல் குருதேவர் அவர்கள் தமது முசிறிச் சித்தரடியான் திரு க.பன்னீர்செல்வம் அவர்களுக்கு அருட்கணிப்பு செய்யப் பயிற்சி செய்வது எப்படி என்பதை விளக்கி எழுதிய அஞ்சல்.
3. **"அனைத்து மதங்களையும் இணைக்கும் வல்லமை சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குத்தான் உண்டு!"** - 05-02-1986இல் குருதேவர் அவர்கள், அமெரிக்காவில் வாழும் சித்தரடியான் திரு நந்தகுமார் அவர்களுக்கு இயக்கத்திற்கான பொருளாதாரத் தேவையை விளக்கி எழுதிய அஞ்சல்.
4. **"பதினெண்சித்தர் குவலய குருபீடம்"** - 24-02-1986இல் குருதேவர் அவர்கள் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்கள் மூலம் அனைத்து அடியான்களுக்கும் கருகுலம் பற்றி விடுத்த மடல்.
5. **"மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியே குருதிப் பலியும், இறைச்சிப் படையலும்தான்"** - 22-06-1986இல் குருதேவர் அவர்கள் முசிறியில் தயாராகியுள்ள சித்தரடியான் திரு சுருளிச்சாமியார் அவர்களுக்கு எழுதிய கருத்து விளக்க மடல்.
6. **"அனைத்து மதங்களுக்கும் மூலக் கோயில் இந்துமதக் கோயிலே!"** - 09-03-1986இல் குருதேவர் அவர்கள் தமக்குப் புதிதாக அறிமுகமாகிய திரு அகமது உசைன் என்பவருக்கு விடுத்த புரிமுக அஞ்சல்.

---

# இந்துமத அருட்பேரரசு உருவான உண்மை வரலாற்றின் ஆரம்பம்

சென்னை-11,
31-1-1986.

## அவசர அவசியச் செயல்விளக்கக் குருவாணை

நிர்வாகக் குழுவின் கருத்தோட்டமும் அருளுலகத்தாரின் எண்ண ஓட்டமும் கலந்து தலைவர், குருதேவரால் அ.வி.தி. தலைமைச் செயலாளர் அருள்மிகு பரமாச்சாரியார் வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களுக்கு விடுக்கப்படும் அ.அ.செ.வி.கு. திருவோலை.

1) "... **தென்னை மரம் வளரும்பொழுது அதன் மட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக உதிர்ந்தே தீர வேண்டும் என்பது இயற்கை நியதி. அதுபோல ஒரு விடுதலை அல்லது புரட்சிப்படை வளரும்போது பலர் அதிலிருந்து விலகுவதும் ஒதுங்குவதும் அல்லது விலக்கப்படுவதும் ஒதுக்கப்படுவதும் நிகழ்ந்தே தீரும். யவனரும், சோனகரும், களப்பிறரும், பல்லவரும் தமிழ்நாட்டை அன்னியர்களின் நாடாக விளங்கச் செய்திருப்பதை எதிர்த்துப் போரிட்டு மாற்றப் புறப்பட்டிருக்கும் விடுதலைப் படையில் புரியாமையாலும், அறியாமையாலும், அச்சத்தாலும், கூச்சத்தாலும், துரோக நெஞ்சத்தாலும் பலர் காரண காரியமில்லாமல் குறை கண்டுபிடித்து குற்றம் சாட்டி வெளியேறுகிறார்கள். இதுதான் சோழப் பேரரசு இந்துமத அருட்பேரரசாக உருவான உண்மை வரலாற்றின் ஆரம்பம்...**" என்ற குருபாரம்பரியச் செய்தியை இங்கு குறிப்பிட்டு அருளாட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நம்மிடையே போலிகளும், காலிகளும், கூலிகளும், பேராசைக்காரர்களும், அவசரக்காரர்களும், ஆத்திரக்காரர்களும், வெறியர்களும், குடிகாரர்களும்,

... தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதைக் கண்டித்து விடுக்கப்படும் **குருவாணை**.

2) விடுதலை இயக்கத்தில் தலைமைக்குக் கட்டுப்பட்டும், பணிந்தும், உழுவலன்போடு செயலாற்றியும், தலைவரின் நேரடிப் பாராட்டுதலை எதிர்பார்க்காமலும், தலைவரிடமிருந்தோ இயக்கத்திடமிருந்தோ எள்முனையளவு கூட உதவியை எதிர்பார்க்காமலும், எத்தகைய கடுமையான சோதனை வந்த போதிலும் தலைவரையோ, தத்துவத்தையோ, இயக்கத்தையோ, ... குறைகூற முயலாத பொறுப்புணர்ச்சியும்; கொள்கைப் பிடிப்பில்லாமல் அடிக்கடி இயக்கத்தை விட்டு வெளியேறிடும் அற்பச் சிந்தையில்லாமல் பக்குவப்பட்ட மனமுடையவராக இருத்தலும் வேண்டும்.

அதிலும் இனவுணர்வோ, மொழியுணர்வோ, நாட்டுணர்வோ, பண்பாட்டு உணர்வோ, நாகரீக உணர்வோ, தன்னம்பிக்கை உணர்வோ, தன்மான உணர்வோ, ... தேவையான அளவு இல்லாமல் அன்னியரிடம் அடிமைப்பட்டு கூலிகளாகவும், கங்காணிகளாகவும், காவடிகளாகவும், ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும், அப்பாவிகளாகவும், ... வாழ நேரிட்டுவிட்ட தமிழர்களை ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒருமுகப்படுத்தி முழுமையான பண்பாட்டுப் புரட்சியில் ஈடுபடச் செய்வதென்பது எளிதான காரியமல்ல. அதாவது, தமிழினத்தின் பண்பாட்டுப் புரட்சிக்கு இந்துமதத்தின் மறுமலர்ச்சியே வழி என்றுணர்ந்து செயல்படும் மிதவாதப் போக்குடைய மதவாத இயக்கங்களான சித்தர்நெறி இயக்கங்களுக்கு; பேராற்றலும், விழிப்புணர்வும், சூழ்ச்சித் திறனும் மிக்க பகைவர்களும், எதிரிகளும் இருக்கின்ற காரணத்தினால் நிர்வாகச் சட்டதிட்ட ஒழுங்குமுறைகளுக்கும், தலைவரின் ஆணைகளுக்கும் கட்டுப்பட்டே வளர வேண்டும்.

3) குருதேவர் என்பவர் தாத்தாக்கள் ஆத்தாக்கள், அம்மையப்பன்கள், உலக அருளாளர்கள், ... முதலிய அனைவரின் ஆளுகைக்கும் உட்பட்டவர். யாருக்கும் அஞ்சல் எழுதுவதென்றாலும்

அல்லது யாரை வாழ்த்துவது என்றாலும் திருவுள ஒப்புதலும், அருளுலகச் சம்மதமும், உலகியலான வசதி வாய்ப்புச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் கிடைத்தேயாக வேண்டும். இவற்றைப் புரியாது குருதேவரின் தொடர்பு கிடைக்காததால் வருந்திப் புலம்பிடும் வஞ்சிப்பட்டி இரவீந்திரன் தமது தவறுகளை உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும். அவர் எதிர்பார்ப்பது போல் குருதேவரின் அஞ்சல் தொடர்பு எளிதில் கிடைக்காது. தாம் ஏழையென தாழ்வு மனப்பான்மையில் குருதேவரையும் இயக்கத்தையும் குறைகூறியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். நிர்வாகக் குழுவிடமிருந்து மன்னிப்புக் கிடைக்கும் வரை அவர் இயக்கத்தின் ஆதரவாளராகத்தான் இருக்க வேண்டும். சன்னிதானமாகச் செயல்படக் கூடாது. எச்சரிக்கை.

4) பல்வேறு காரணங்களை முன்னிட்டும்; தொடர்ந்து சித்தரடியார் சோ.இரவீந்திரன் (சொக்கலிங்கபுரம்) அவர்கள் எங்கு சென்றாலும் தோல்விகளும், துன்பங்களும், சோதனைகளும், அவப்பெயர்களும்தான் கிடைக்கின்றன என்கின்ற காரணத்தினாலும்; உலகியலாக மேற்படி சோ.இரவீந்திரன் அவர்கள் **முழுநேர ஊழியராகச் செயல்படுவதிலிருந்து விடுவிக்கப் படுகின்றார்**. 31-1-1986 நள்ளிரவில் குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் திருவோலக்கத்திலிருந்து விடுக்கும் அருளாட்சித் தாக்கீது இது.

இந்த அஞ்சல் கண்டது முதல் அவர் சித்தரடியார் என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு விரைந்து இல்லறம் ஏற்பதற்குரிய சித்தரடியான் என்ற நிலைக்கு மாற்றப்படுகிறார். அவர் விரும்பினால் தாடி முடியுடன் இருக்கலாம். இல்லையென்றால் உலகியலுக்கேற்ப அனைத்தையும் மாற்றிக் கொள்ளலாம். அவர் தனக்கும், தனது குடும்பத்துக்கும் தேவையான பொருளீட்ட எந்தத் தொழிலிலும் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. சனவரி மாத உதவித் தொகையாக பிப்ரவரி மாதம் அனுப்பப்படுகின்ற ரூபாய் 120/- உடன் உதவித்தொகை அனுப்புவது நிறுத்தப்படுகிறது. ஏனெனில்,

குருதேவர் அறிக்கை அச்சிடுவதற்காக வசூலாகும் தொகையில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதாவது நிர்வாகக் குழு மாதாமாதம் ரூ.120/- உதவித்தொகை அனுப்ப இயலாத நிலையை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

இவருக்கு மதுரை மாவட்டத்தில் சொந்தத் தொழிலேதும் கிடைக்காவிட்டால் உடனடியாக இவர் வடஆற்காடு மாவட்டம் வேலூருக்கு வந்து திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் சுப்பையா அவர்கள் நடத்த விரும்பும் தொழிலில் அமரலாம். இது அவரது சொந்த விருப்பம். இது முதல் அவர் மறு குருவாணை வரும்வரை எந்தவிதமான இயக்கப் பணிகளிலும் ஈடுபட வேண்டாம். அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் பொருளீட்டும் பணியில் ஈடுபடட்டும். இது பற்றி யாரும் எந்தவிதமான விமரிசனமும் கூறக் கூடாது என்று குருவாணை விதிக்கப்படுகிறது.

மேலும், அவர் விரைவில் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தில் ஈடுபடுவதுதான் நல்லது என்பது அருளுலகத்தவர்களின் முடிவு. அதாவது, சொக்கலிங்கபுரம் சோ.இரவீந்திரன் அவர்கள் விரைந்து ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபடுவதின் மூலமும், உடனடியாக இல்லற வாழ்க்கையைத் துவங்குவதின் மூலம்தான், அவரால் அவருக்கேற்பட்டுள்ள அனைத்து வகையான கறைகளையும், குறைகளையும், சிக்கல்களையும் அகற்றிக் கொள்ள முடியும். இந்தக் குருவுளக் கருத்தை அவர் அவருடைய ஊழ்வினைக்கும், விதிக்கும், மதிக்கும் ஏற்ப எப்படிப் புரிந்து எப்போது பயன்படுத்தினாலும் சரியே, இனிமேல் அவருடைய போக்குக்கு குருதேவரையோ இயக்கத்தையோ யாரும் குறை கூறக் கூடாது என்று இக்குருவாணை மூலம் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

5) அருள்மிகு கல்கத்தா காளி சன்னிதானம் செயராமன் அவர்கள் குருதேவரை நேரில் சந்திக்கும் வரை மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு மட்டும் சென்று வரட்டும். வேறெந்த இ.ம.இ., அ.வி.தி. பணிகளிலும் ஈடுபட வேண்டாம். இதை அவருக்கு

தெரிவிக்குமாறு அனைவருக்கும் குருவாணையிடப்படுகின்றது. குறிப்பாக மதுரை மாவட்டத்தின் தலைவராக இருக்கும் இராசுநாயுடு அவர்கள் உயர்திரு செயராமன் அவர்களைச் சந்தித்து அமைதியாகவும் நிதானமாகவும் இருக்கும்படிக் கூறட்டும். மற்றவை நேரில்.

6) அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் இராசுநாயுடு அவர்கள் முன்பு விதித்த குருவாணையின்படி வஞ்சிப்பட்டிக்குச் செல்லத் தேவையில்லை. வஞ்சிப்பட்டி இரவீந்திரனோடு சேர்ந்து அருட்பணியாற்றத் தேவையில்லை. அ.வி.தி. தலைமைச் செயலாளர் நெ.சேவுகன் அவர்கள் கூறியபடி செயல்பட்டால் போதும்.

7) தலைமைப் பொறுப்பாளர் 10-2-1986 மதுரையில் நடைபெறும் அமாவாசைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அனைத்துச் செய்திகளையும் பற்றி விவாதிப்பார். நம்மவர்களில் யார் எதைக் கூற விரும்பினாலும் அதை அவரிடம் கூறலாம். 23-2-86 மாநகராட்சி, ஊராட்சித் தேர்தல்கள் முடிந்த பிறகு குருதேவர் மதுரைக்கோ, கம்பம், கூடலூர், சின்னமனூருக்கோ அல்லது குருகுலத்துக்கோ தொடர்ந்து ஐந்து (5) நாட்கள் மருத்துவ விடுப்பு எடுத்து சுற்றுப்பயணம் மேற்கொள்வார். இதுபற்றி அமாவாசைக் கூட்டத்தில் முடிவெடுத்து ஆவன செய்யவும்.

அன்பு

**அருளாட்சி நாயகம், குருதேவர்,**
**குவலய குருபீடம், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
31/1/1986.

//உண்மை நகல்//

<u>நகல் நல்குபவர்:</u> அருள்மிகு குருவின் பதிலி சீ.மணி

**//மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருளைப் பொருளுக்கு விற்பவரல்ல நாம்!

சென்னை-11,
31.1.1986.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய அருள்மிகு ஓமாந்தூர் பெரியண்ணசாமி சன்னிதானம் முசிறி இ.ம.இ. தலைவர், திரு க.பன்னீர்செல்வம் அவர்களின் சமூகத்திற்கு அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம் சித்தரடியார் ஏ.இரவி B.Sc., வரையும் மடல்.

(1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

(2) தங்களது கடிதங்கள் அனைத்தும் கிடைத்தன. மகிழ்ச்சி, குருதேவரின் பாராட்டு.

(3) தாங்கள் அனுப்பிய வழக்குகளுக்கு அருட்கணிப்பு வழங்குவதற்கு தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணையும், ஒப்புதலும் இதுவரை குருதேவருக்குக் கிடைக்கவில்லை. நாளோலக்கத்தில் கணித்து அனுப்பலாம் என்றாலும் அதற்கான நேரமோ, ஓய்வோ, வாய்ப்போ, வசதியோ .... குருதேவருக்கு கிடைப்பதேயில்லை.

காலை 4 மணிக்குக் கண் விழித்தது முதல் நமது குருதேவர் காலைக் கடன்களை முடித்து குளித்து உணவருந்தி விட்டு அவசர அவசரமாக 7:30 மணிக்கு வீட்டை விட்டு புறப்படுகிறார். இதற்கிடையில் வீட்டுப் பிறச்சினைகள், இளைய சன்னிதானங்களின் அன்புத் தொல்லைகள், என்னைப் போன்ற பணியாளர்களின் கவனக் குறைவு, நினைவின்மை, ... முதலிய அனைத்தையும் கவனிக்கிறார். பின்பு முந்தியடித்துக்

கொண்டு மக்கள் கூட்டத்தின் நெரிசலில் பேருந்தில் பயணம் செய்து, இரண்டு மின் தொடர் வண்டிகள் மாறி ஏறத்தாழ 75 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து கல்லூரி செல்கிறார்.

கல்லூரியில் பணி புரிந்து விட்டு மறுபடியும் 75 கி.மீ தூரம் பயணம் செய்து மாலை 7:30 மணியளவில் சோர்வுடன் வீடு வந்து சேர்கிறார். சில சமயம் 8:30 மணிக்கும் வருவதுண்டு. வந்த களைப்பு நீங்காமலேயே அன்று வந்த அஞ்சல்களைப் படிக்கச் சொல்லிக் கேட்கிறார். முக்கியமானவற்றிற்கு அவரே பதிலெழுதுகிறார். மற்றவற்றிற்கு என்னைப் போன்றவர்களிடம் கூறி எழுதச் சொல்கிறார்.

இப்போதும், மறுபடியும் வீட்டுப் பிறச்சினை, இளைய சன்னிதானங்களின் அன்புத் தொல்லை, என்னைப் போன்றவர்களின் கவனமின்மை, ... முதலியவைகளை இடையிடையே பார்த்துக் கொள்கிறார். எழுதும் பணி முடிவடைந்து அவர் உறங்கச் செல்வதற்கு எப்படியும் இரவு மணி 1 அல்லது 2 ஆகி விடுகிறது. சில சமயம் உறங்குவதேயில்லை.

இதே வாழ்க்கை கம்ப்யூட்டர் கதியில் மீண்டும் மீண்டும். இந்த இயந்திர வாழ்க்கைக்கு இடையேதான் நமது குருதேவர் பல நெடிய அஞ்சல்களையும், பல கட்டுரைகளையும், குருதேவர் ஏடு சம்பந்தமான கட்டுரைகள், செய்திகளையும் எழுதிடுகின்றார். அருளுலகத் தொடர்பு கொள்கிறார். அனைத்து மாவட்ட, மாநில, இந்திய, வெளிநாட்டிலுள்ள நமது இயக்கத்தவர் அனைவரையும் அருளுலகக் கண்காணிப்புச் செய்கிறார். அனைவருக்கும் பாதுகாப்பு வழங்குகிறார். பலருக்கும் நேரில் காட்சியளித்து உரையாடுகின்றார். சந்தேகங்களை நீக்குகின்றார். ஐயங்களைப் போக்குகின்றார்.

(4) இந்தச் சூழலில்தான் தாங்கள், ‘எனக்கு உடனடியாக அருட்கணிப்பு வேண்டும்’ என்று வற்புறுத்தி அஞ்சல் எழுதுகிறீர்கள். எப்படி முடியும் நம் குருதேவரால்?!?! இருக்கும் ஓரிரு மணி

தூக்க நேரத்தையும் செலவழித்து அருட்கணிப்பு செய்யலாம் என்றால் அருளுலகத்தவர்களின் ஒப்புதல் இல்லை. எனவே, தாங்கள் குருதேவருக்கு நேரடியாக அனுப்பும் வழக்குகளுக்கான அருட்கணிப்பு தங்களுக்குக் கிடைக்க சில அல்லது பல நாட்களாகலாம்.

(5) அடுத்து தாங்கள் ரூ48 + 16 = ரூ64/- வாங்கிக் கொண்டு அனுப்பும் வழக்குகளுக்கு நம்மவர்கள் முத்தையா, M.C.இராமன், சரோசினி சுடாலின், இராசுநாயுடு, வீரமாகாளி சன்னிதானம், ... போன்ற யாராவது ஒருவரின் கணிப்பும், பரிந்துரையும் அவசியம் இருந்தேயாக வேண்டும், இருந்தேயாக வேண்டும், இருந்தேயாக வேண்டும். அப்படியன்றி குருதேவரே நேரடியாகக் கணித்து அனுப்ப வேண்டும் என்று விரும்பினால் ரூ.108/- குருதேவருக்கு காணிக்கையாக அனுப்ப வேண்டும்.

பணம் ரூ.64/- அனுப்பினால் கணிக்க மாட்டேன் என்று கூறுபவர், ரூ.108/- அனுப்பினால் மட்டும் கணிக்கிறேன் என்று சொல்கிறார்; இதற்கு பணம்தான் காரணம் என்று தாங்கள் தவறாகக் கனவிலேயும் மறந்தும் கூட நினைத்து விடாதீர்கள். இதற்குக் காரணம் குருதேவர் காலத்தைப் பொன்னை விடச் சிறந்ததாக கிடைப்பதற்கரியதாகக் கருதுகிறார்.

தாங்கள் விரும்பினால் ரூ.25/-ஐ வாங்கிக் கொண்டே மக்களுக்கு நம்மவர்கள் முத்தையா, சரோசினி சுடாலின், ம.சி.இராமன், ... போன்றவர்களைக் கொண்டு அருட்கணிப்பு செய்து கொள்ளலாம். பரிகாரமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். தமக்குச் சமமான எண்ணற்ற அடியான்களை, அடியாள்களை, அடியார்களை குருதேவர் பேரருட்கொடை வள்ளல் இதற்காகவே உருவாக்கி வைத்திருக்கிறார். ஏழை எளிய மக்களுக்கு பணம் வாங்காமலேயே கூட அருட்கணிப்பு செய்யுமாறு நமது குருதேவர் நம்மவர்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்.

**நாம் மந்திரவாதிகளல்ல, குறிகாரர்களல்ல. அருளைப் பொருளுக்கு விற்கும் அடிமைக் கூட்டமல்ல; வஞ்சகக் கயவர் கூட்டமல்ல; தன்மானத்தை விலை பேசிடும் கூலிக்கார அரசியல்வாதிகளல்ல. மாபெரும் தத்துவத்தின் வாரிசுகள். தாய்நாட்டை அன்னியர்களிடமிருந்து விடுவிக்க வேண்டி, தாய்நாட்டு மக்களுக்கு இனவுணர்வையும், மொழியுணர்வையும், நாட்டுணர்வையும், பண்பாட்டுப் பெருமையையும், நாகரீக உரிமையையும் ... விளக்கிக் கூற வந்திருக்கிறோம்**. அதை அவர்கள் மீண்டும் பெறத் தெளிவான செயல்திட்டங்களை வகுத்து வைத்திருப்பவர்களே நாம்.

"தமிழா! இனவுணர்வு கொள்! மொழியுணர்வு கொள்!" என்று வெறும் பேச்சு பேசி சுவற்றில் எழுதும் போலிக் கூட்டமல்ல நாம். இனவுணர்வும், மொழியுணர்வும் எப்படி வரும் என்பதைச் சிந்தித்து செயல்திட்டங்கள் வகுத்து நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களே நாம். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

(6) "நானே அருட்கணிப்பும் அருள்வாக்கும் கூறுவதற்கு எனக்கு சத்திகளையும், சித்திகளையும் குருதேவர் வழங்க வேண்டும்" என்று எழுதியிருந்தீர்கள். தங்களுக்கு எப்போதோ குருதேவர் அருட்சத்தியையும், அதற்கான உத்தரவையும் வழங்கி விட்டார். தாங்கள்தான் சரியான பயிற்சிகளையும், முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. தங்களைப் போன்ற அரசாங்க அலுவலர்களுக்கு அது மிகவும் கடினமான ஒன்றாக, இயலாத ஒன்றாகத் தெரியலாம். முயலுக.

"வீட்டில் கலசம் வைத்து இரவு 11-1½ அல்லது பகல் 11-1½ தவபூசையில் அமர்ந்து பூசையை 48 நாட்கள் அதாவது ஒரு மண்டல காலத்திற்கு தொடர்ந்து செய்து வந்தீர்களேயானால் தாங்கள் சித்தி பெறுவதற்கான வாய்ப்புண்டு". பூசை செய்யும் முறையை நமது தலைமைச் செயலாளர் நெ.சேவுகனிடம் கேட்டு அறிந்திடுங்கள்.

‘குருதேவர்’ ஏட்டில் வெளியிட்டுள்ள மந்திரங்களைப் பயிற்சி செய்க. மந்திரங்களை எப்போது வேண்டுமானாலும் - அதாவது நடந்து போகும் போதும், பணி செய்யும் போதும் கூட பயிற்சி செய்யலாம். விடாமுயற்சியுடன் முயலுக.

(7) 1-2-1986 முதல் 5-2-1986 வரை முசிறி சுற்றுப்பயணம் வரும் நெ.சேவுகன், சோ.இரவீந்திரன், சரோசினி சுடாலின் ... ஆகியோருக்கு பொது இடத்தில் மேடையமைத்து அவர்கள் பேச வாய்ப்பை ஏற்படுத்தித் தருக.

நிறைய அஞ்சல்களுக்குப் பதில் எழுத வேண்டுமாதலால் இத்துடன் இவ்வஞ்சலை விரிவஞ்சி நிறைவு செய்கிறேன்.

அன்புடன்

**ஏ.இரவி B.Sc.**

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்த அஞ்சலின் நகல்.//**

# அனைத்து மதங்களையும் இணைக்கும் வல்லமை சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குத்தான் உண்டு!

5-2-1986,
Madras-11.

1) குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் தமது ஏற்புச் செல்வன் சித்தரடியான் தேவி பவானியம்மன் சன்னிதானம், காஞ்சி காமாட்சியம்மன் சன்னிதானம், ஆதிசங்கராச்சாரியார் பீடாதிபதி, வெளிநாட்டுப் பதிலி, ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், பல்லவப் பெருமண்டல அருளாட்சி நிர்வாக ஆணையாளர், பிறம்மநிலை பெற்றூர், சித்தரடியான் சு.நந்தகுமார் அவர்கள் சமூகத்திற்கு எழுதுவது.

2) நண்ப! கடந்த இரண்டு மாதகாலமாக விட்டுவிட்டு எழுதிடும் இந்த அஞ்சல் எமது நிலைகளை, சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய அவலக் கேவலங்களை விளக்கிடும். Religious Reconditioning and Modernisation is our principle, policy, aim, attitude, approach, notion and motto == அகில உலக ஆன்மநேய ஒருமைப்பாடும் (Uniformity), ஒற்றுமையும் (Unity) உருவாக்கிய அனைத்து மதங்களும், மதத்தைப் பற்றிய கருத்துக்களும் வரலாற்றுப் பூர்வமாக விளக்கப்படல் வேண்டும். இலக்கிய அடிப்படையில் தத்துவ விமரிசனங்களும், சித்தாந்த நடைமுறைகளும் உருவாக்கப்படல் வேண்டும். இதற்கு உலக மதங்களின் மூலமாகவும், தாயாகவும்

இருக்கின்ற இந்துமதம் *போலியான ஹிந்துமதத்*திலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும். ஆரிய மாயை, பிருமணச் சூழ்ச்சி, பார்ப்பனச் சுரண்டல், ஆச்சாரியார் தவறுகள், பீடாதிபதிகளின் முறைகேடுகள், மடாதிபதிகளின் சர்வாதிகாரங்கள், அப்பாவி மதவெறியர்களின் கண்மூடிப் போக்குகள், மத அறிஞர்களின் ஆபாசக் கற்பனைகளும், அண்டப்புளுகுகளும் நிறைந்த விரிவுரைகள், பொதுவாகச் செய்தியாளர்களும் பதிப்பகத்தார்களும் வியாபார நோக்கில் வளர்க்கின்ற மடமைகள், ... முதலிய அனைத்தும் முறியடிக்கப்பட்டேயாக வேண்டும். இதற்கு ஏராளமாகப் பொருள்வசதி (Financial Backings and Support) தேவை.

3) பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் இந்துமதத்தை 43,73,086 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்தபோது வழங்கிய கருத்துக்கள், பழக்க வழக்கங்கள், சடங்கியல்கள், ... முதலியன அப்படியே மீண்டும் எழுதப்பட்டும், பேசப்பட்டும் மக்கள் அனைவருக்கும் இந்துமத அறிவும், ஆர்வமும், நம்பிக்கையும், ... ஏற்படுமாறு செய்ய வேண்டும். ஏனெனில், இந்துமதம்தான் மதமெனும் பயிருக்கு வேலி, விதைமுதல், நாற்றங்கால். உலகில் அரசியல் மாற்றங்களோ, மதமாற்றங்களோ, மார்க்சீயமோ, நாத்திகமோ, கலையியக்கமோ, இலக்கியக் கொள்கையோ... எந்த மாற்றத்தையும் செய்யவில்லை, செய்ய முடியவில்லை. எனவே, மத மறுமலர்ச்சிதான் (The Religious Renaissance can alone end and eradicate all the ills and evils of the Universe.) அனைத்து வகையான தீயவைகளுக்கும், கெடுதல்களுக்கும் முடிவு கட்டும்; அல்லது அனைத்துத் தீமைகளையும் அகற்றும்! அகற்றும்! அகற்றும்!

4) அரசியல்வாதி, சமூகவாதி, கலைவாதி, இலக்கியவாதி, தொழிலதிபர்கள், நாத்திகர்கள், ... அனைவரிலும் பெரும்பாலானவர்கள் குருடர்கள், திருடர்கள், வெறியர்கள் என்ற நிலையில்தான் உள்ளனர்.

ஒட்டுமொத்தமாக வறுமை, ஏழ்மை, பசி, நோய், ஏற்றத்தாழ்வு, சுரண்டல், முதலாளித்துவச் சர்வாதிகாரம், ... முதலியவைகளை அகற்றும் வல்லமை அரசியலுக்குமில்லை, மற்ற சமுதாய இலக்கிய கலைகளுக்குமில்லை. குறிப்பாக இன்றுள்ள அனைத்து மதங்களையும் இணைத்துச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் வல்லமை சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**துக்குத்தான் உண்டு. மதத் தலைவர்களில் சிலர் செய்யும் தவறுகள் மதத்தின் தவருக வி்ளம்பரம் செய்யப்படுவது அயோக்கியத்தனம், பித்தலாட்டம், ஏமாற்று. அதாவது மிகக் குறைந்த அளவில் தவறுகளையும், இயலாமைகளையுமுடைய **பெரிய ஆற்றல்மிக்க ஒரு துறை மதத்துறையே. அதன் மூலமும், தாய்மையும், தூய்மையும் சித்தர்நெறியே!**

**அன்பு**

**சித்தர் கருவூரர்.**

**நகல் எடுத்தவர்:-**

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம், சித்தரடியார் ஏ.இரவி B.Sc.,

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# பதினெண்சித்தர் குவலய குருபீடம்

சென்னை-11,
24-2-86.

அன்பு வீ.மா.ச.!

1) அனைத்தும் ஆத்தாக்கள் தாத்தாக்கள் அருளால் நலமாகட்டும்! வெற்றியாகட்டும்! அமைதியாகட்டும்!

2) தங்களின் அஞ்சல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன! செய்திகள் அறிந்து மகிழ்ந்தோம்.

3) தற்பொழுது கல்லூரிப் பிறச்சினைகள் அனைத்தும் வக்கீல் வைத்து சரி செய்யப்பட்டு உள்ளன. அம்மாவுக்குத் தெரிந்த வக்கீல் முழுப் பொறுப்பெடுத்துள்ளார். கவலை வேண்டாம். இங்கும் எங்கும் அமைதி.

4) நண்ப! நாம் அரசுக்கு எதிரானவர்கள் (Anti-Government) என்ற கண்ணோட்டம் நிலவி வருகிறது. எனவேதான், குருதேவர் தேர்தல் அலுவலராக (Presiding Officer) நியமிக்கப்பட்டார். தேர்தல்களும் அமைதியாக நடந்தன.

5) நாம் அரசுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதற்காகத் தற்போது அரசு முழு ஆதரவு பெற்ற ஆதிபராசத்தி வாரவழிபாடு மன்றத்தில் நம்மில் முடிந்தவர்கள் உறுப்பினராகச் சேர வேண்டும் என்று குருதேவர் கருத்துத் தெரிவிக்கிறார். எனவே, நமது அடியான்களிடம் இதனைச் செயலாற்ற தாக்கீது அனுப்பிடுங்கள். இதுவே நாம் முழுமையாக வளரும் வரை ஓரளவு பாதுகாப்பு

கூட நல்கலாம். வீணான தொல்லைகளும் பிறச்சினைகளும் குறையும், புரிய வைத்திடுங்கள்.

6) நெடுங்காலமாக நாம் எதிர்பார்த்த, நம் இயக்கத்திற்கு என்று ஒரு நிலம் வாங்கப்பட்டது. அதாவது, காரணோடை நாகேசுவரன் அவர்கள் அன்பளிப்பாக, காணிக்கையாக, நன்றிக்கடனாக, வேண்டுதலாகக் கொடுத்தது. கடந்த 21.2.86இல்தான் பதிவு (Registration) செய்யப்பட்டது. முழுதும் (34 சென்ட்) குருதேவர் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

7) காரணோடையில் நமது பதினெண்சித்தர் குவலய குருபீடம் அமைத்ததும் அனைத்து குருகுலத்திற்கும் கருவாக, தலைமையாக அறிவிக்கப்படும். இந்நிகழ்ச்சி வரும் மாசி சிவராத்திரிக்குள் அல்லது சிவராத்திரி நாளில் பெரிய விளம்பரங்களுடன் தொடங்கப்படும். நமது அருளாளர்கள் அனைவரும் பூசைகள் செய்ய அறிவிப்பு விடுத்திடுங்கள். நமது தலைமைக் குருபீடம் காரணோடையில் கீழ்க்கண்ட அமைப்புகள் அடங்கி உள்ளன:

1. இராமகிருட்டிணர் மடம்,
2. மெய்யான இந்துமத வேதபாடசாலை,
3. சித்தர்நெறிப் பயிற்சிக் குருகுலம்,
4. ஆயிரத்தெட்டு கருவறையின் சிவாலயம்,
5. அண்டபேரண்ட ஆதிசத்திகள் பெரியகோயில்,
6. மெய்யான தவப்பள்ளி,
7. ஒன்பது கோள் (சனீசுவரத்) தேவாலயம்,
8. நூற்றெட்டுத் திருப்பதி அருட்கோட்டம்,
9. ஆதிபராசத்தி வார வழிபாட்டு மன்றம்,
10. சித்தர்நெறி யோகாசனம்-ஓகாசனப் பயிற்சி நிலையம்,
11. சித்தர்நெறி இலக்கிய வளர்ச்சிக் கழகம்,
12. பதினெண்சித்தர் சித்தாந்தத் திருச்சபை,

13. உலக அருளாளர் கழகம்,
14. உலகமத ஆய்வுக் குழு,
15. ... ... ... ஆய்வு மையம், [*நகலில் முழுமையின்றி இருந்தது.*]
16. தெய்வீக மருத்துவமனை (The Divine Healing Curing Home),
17. அருள் நலமளிப்பு இல்லம்,
18. அண்டபேரண்ட ஆய்வு மையம் (The Cosmic Research Centre),
19. சித்தர்நெறி வித்தகர் குழுமம் (The Siddha Intellectual Board),
20. இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைமைச் செயல்நிலையம்,
21. பன்னாட்டு பன்னேக்கு சித்தர்நெறிப் பல்கலைக் கழகம் (The International University of Siddha Cult).

எனவே, இனி நாம் நிலையான தொடர் வளர்ச்சி நிலையைப் பெற்று விடுவோம். அனைத்தும் ஆத்தாக்கள் தாத்தாக்கள் செயலே.

**அன்பு**
**சித்தரடியான் பெ.சௌந்தரராசன்,**
**தொட்டியம் மருதக்காளி சன்னிதானம்.**
**24.2.86.**

<u>நகல் தயாரித்தவர்:</u>

அன்பு / அருள்மிகு சமயபுரத்து மாரியம்மன் சன்னிதானம் M.R.சீனிவாசன் R.M.P., 90, தென்கள்ளர் தெரு, முசிறி - 621211, திருச்சி மாவட்டம், 26.02.1986.

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு MR சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது நகல்.//**

# மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியே குருதிப் பலியும், இறைச்சிப் படையலும்தான்

**அருள்மிகு சுருளி சாமியார் சத்திவேல் பிள்ளை அவர்கள் சமூகத்திற்கு (வாத்தியார், முசிறி-621211) தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் விடுக்கும் திருவோலை.**

1) அருள்மிகு வெட்டுடையார் காளி சன்னிதானம், அருட்சேனைத் தளபதி சித்தரடியார் சண்முகானந்தன் ஓலைநாயகமாக இருந்து வரைவது.

2) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அனைத்தும் அம்மையப்பன் அருளால் இனிது நிறைவேறட்டும். தாங்கள் அருட்பட்டங்களை தங்களுக்கு உரியனவாகச் சித்தி செய்து கொள்வதற்காக ஒரு மண்டல காலம் திருக்கலயம் வைத்து பூசைகளைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். இந்த 48 நாட்கள் நடைபெறும் பூசைகளில் நமது முசிறி வட்டார அடியான்கள் அனைவரும் கலந்து கொள்வது அவர்களது அருளாற்றலை வளர்த்திடும். எனவே, தங்களுக்கு என்னென்ன அருட்பட்டங்கள் வழங்கப் பட்டிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளருக்குத் தெரிவித்தீர்களா? (அருள்மிகு பரமாச்சாரியார் நெ.சேவுகன், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், C/O காதி வசுத்திராலயம் GRNS, கொட்டாம்பட்டி-625103.)

3) பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரிய மரபுப்படி எந்த ஒரு பதவியானுலும், அதன் பொறுப்பு ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்படுவதே மரபு. இதன்படி தலைவர், இணைத்தலைவர், துணைத்தலைவர், செயலாளர், இணைச்செயலாளர், துணைச்செயலாளர், அமைப்பாளர், இணை அமைப்பாளர், துணை அமைப்பாளர் என்று ஒவ்வொரு (i) சிறுசிறு கிளை அமைப்புக்கள் முதல் (ii) ஊர்கள் (iii) வட்டாரங்கள், (iv) வட்டங்கள், (v) மாவட்டங்கள் என்று ஐந்து வகையான நிலைகளில் மேற்படி ஒன்பது அலுவலர்களும் அமைக்கப்பட்டாக வேண்டும்.

எனவே, தாங்கள் செயலாளர் என்ற முறையில், விரைந்து திருச்சி மாவட்டம் முழுவதும் அனைத்து ஊர்களிலும், வட்டாரங்களிலும், வட்டங்களிலும்; மேற்படி ஒன்பது பதவிகளிலும் ஆர்வமுள்ள இளைஞர்களையும், பெரியவர்களையும் தேர்ந்தெடுத்து (பெண்கள் கிடைத்தாலும் பதவிகளில் நியமிக்கவும்) நமது இயக்க நிறுவனங்களை திருச்சி மாவட்டம் முழுவதும் வளர்க்க வேண்டும். இதற்கான வரவு செலவுகளை தாங்களும், தலைவர் க.பன்னீர்செல்வம் அவர்களும் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்களின் மூலம் (அருள்வாக்குக் கூறுதல், முடிகயிறு தாயத்து எந்திறங்கள் வழங்குதல், நமது இயக்க நண்பர்களிடம் நன்கொடையாகப் பெறுவது) பெறுகின்ற நிதியைப் பயன்படுத்தி கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்.

இக் கணக்கினை தலைவர், தலைமைப் பொறுப்பாளர், தலைமைச் செயலாளர், நிறுவன நிருவாகக் குழு தேவைப்படும் பொழுது நேரடியாகச் சரிபார்த்துக் கொள்வார்கள். இது தவிர மாவட்ட எல்லைக்குள் யாரும் தங்களையோ, திரு பன்னீர்செல்வத்தையோ நமது இயக்கச் சட்டதிட்டப்படி வரவு செலவு பற்றிக் கணக்குக் கேட்க இடமில்லை.

4) நமது தலைவர் க.பன்னீர்செல்வம் அவர்கள் அதிகம் ஓய்வில்லாதவர் என்பதால், உடனடியாக இணைத் தலைவர், துணைத்

தலைவர் என்று இரண்டு பேர்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இதேபோல், உங்களுக்கு உதவியாக, உங்கள் விருப்பம் போல் இரண்டு பேர்களை இணைச் செயலாளராகவும், துணைச் செயலாளராகவும் பதவிகளில் நியமித்து விடுங்கள். இப்படி திருச்சி மாவட்டத்திற்கு முசிறியையே தலைமை நிலைய இருப்பிடமாக உருவாக்கி; தேவையான தலைவர்கள், செயலாளர்கள், அமைப்பாளர்கள், அ.வி.தி. செயல்வீரர்கள்; மதத்தில் நம்பிக்கையோ, ஆர்வமோ இல்லாத சமுதாய அரசியல் கலை இலக்கிய வாதிகளை தமிழின விடுதலைக்காக ஒன்று திரட்டும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற கட்டமைப்பிலும் உருவாக்கிடுங்கள்.

இவை பற்றி வாரம் ஒரு முறையாவது தங்களிடமிருந்து அஞ்சல்கள் தலைமைப்பீடத்திற்கும், நிறுவன நிர்வாகக் குழுவிற்கும் (அருள்மிகு அகிலாண்டேசுவரி சன்னிதானம், சித்தரடியார் கு.சத்திவேலு B.E., 6, ஆர்டிசன் சண்முகம் தெரு, அயனாவரம், சென்னை-600023), தலைமைப் பொறுப்பாளருக்கும் (அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம், சி.கவிக்குமார் B.Sc., 56, N.G.O. காலனி, பொன்னேரி-601204) கட்டாயமாக எழுத வேண்டும்.

**<u>குறிப்பு:-</u>** எந்தப் புதிய செயலும் நிகழாவிட்டாலும் பாதகமில்லை. அங்குள்ள நம்மவர்களின் நலம் பற்றிய செய்திகளையாவது வாராவாரம் தெரிவிக்க வேண்டும். அத்துடன் நீங்கள் என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் என்ற செயல்திட்டங்களையும் தெரிவிக்க வேண்டும்.

தங்களுக்கு நிறைய மாணாக்கர்கள் இருக்கிறார்கள் என்பதால், யாராவது ஒருவரை அல்லது இருவரை நமது சித்தர்நெறிப்படி சன்னிதான உடையோ அல்லது சிவப்பு வண்ணத்தில் சட்டை, கால்சட்டையோ அணிந்து திரிசூலத்தையும், நமது மெய்ஞ்ஞானக் கொடியையும், மயில் பீலியையும்; தங்களின் சுற்றுப்பயணத்தின் போதும் சரி, உள்ளூருக்குள் கோயிலுக்குச் செல்லும்போதும் சரி தூக்கி வரச் சொல்லுங்கள். வெள்ளி, செவ்வாய் இரண்டு கிழமைகளிலும்

தங்களின் வசதி வாய்ப்புப்படி காலையிலோ, மாலையிலோ பொதுமக்களுக்கு மந்திரித்து அருள் வழங்குங்கள்.

இப்படி அருள் வழங்கும் நிகழ்ச்சி அழகுநாச்சியம்மன் சன்னிதானத்தில் நிகழ்வதே சிறப்பாக இருக்கும். ஏழை, எளிய மக்களுக்கு அவர்களின் வசதிப்படி அன்போடு வழங்கும் காணிக்கையையும் பெற்றுக் கொள்ளுங்கள். வியாழக்கிழமைகளில் இரவில் சுடுகாட்டில் கோழி, புரு, ஆடு, மீன் எனும் நான்கில் எது கிடைக்கிறதோ அதைப் பலியாகக் கொடுத்து பரிகாரப் பூசைகளைச் செய்யுங்கள். இந்தப் பூசையில் பரிகாரம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் மட்டும் நமது இயக்கத்தவர்களுடன் கலந்து கொள்ளட்டும். ஏனெனில், மக்களிடையில் நம்மை **சுடுகாட்டுப் பூசைக்காரர்கள் என்றும்; ஆடு கோழி அறுத்துப் பலி கொடுப்பவர்கள்** என்றும் குறை கூறிக் குற்றம் சாட்டித் திரிகிறுர்கள் நமது எதிரிகள். இதனை முறியடிப்பதற்காகத்தான் வியாழக்கிழமைகளில் நடைபெறும் பரிகாரப் பூசைகளில் மட்டுமே (கடுமையான பாதிப்புள்ளவர்களுக்கு மட்டுமே) பலி கொடுத்துச் செய்யும் பரிகாரப் பூசைகள் நிகழட்டும்.

அதாவது, **யாகசாலைகளில் நெருப்பு வளர்க்கும் போதும், ஆங்காங்கே புத்துயிர்ப்புப் பணிகள் செய்யும்போதும், வீடுகளுக்கும், விளைச்சல் நிலங்களுக்கும், தொழில் நிலையங்களுக்கும் குருதிப்பலி கொடுத்துத்தான் பூசை செய்ய வேண்டும் என்ற சித்தர்நெறிச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை இது பாதிக்காது. ஏனென்றுல், சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியே குருதிப்பலியும், இறைச்சிப் படையலும்தான். இதனை யாரும் எக்காரணத்தை முன்னிட்டும் மறப்பதோ, துறப்பதோ, மறைப்பதோ, குறைப்பதோ, மறுப்பதோ, வெறுப்பதோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்பதுதான் குருபாரம்பரியச் சட்டதிட்டக் கட்டுப்பாடு.** இப் பேருண்மையினை நம்மவர்கள் எப்போதும் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும்.

5) பலி கொடுப்பதையோ, இறைச்சிப் படையலையோ விரும்பாதவர்கள் மேற்படி பரிகாரப் பூசைக்காகப் பணத்தை மட்டும் கொடுத்து விட்டு யாராவது ஒருவரைத் தங்களின் பதிலியாக அனுப்பி, அவர்களின் மூலம் அருளூறு பூசனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், பலி கொடுக்காமல், இறைச்சியுணவுப் படையல் போடாமல் எந்தவிதமான பரிகாரப் பூசையும் **மெய்யான இந்துமத**ப்படி செய்ய முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

6) நமது அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையமாகவும், யாகசாலையாகவும், தவக்குடிலாகவும், குருகுலமாகவும் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு பஞ்சவடியை உருவாக்கி (1. அசோக மரம், 2. நாவல் மரம், 3. நெல்லி மரம், 4. எட்டி மரம், 5. பொரசு, 6. ஆல், 7. அரசு, 8. வேம்பு, 9. இச்சி, 10. அத்தி அல்லது ஆத்தி, 11. பலா, 12. மா, 13. வேங்கை, 14. மருத மரம், 15. குருந்த மரம், 16. புன்னை மரம், 17. கொன்னை மரம், 18. தென்னை மரம் .... முதலிய மரங்களில் வசதிவாய்ப்புப்படி ஏதேனும் ஐந்தினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இதுவே பஞ்சவடி எனப்படும்.) வாரத்தில் கட்டாயமாக வியாழக் கிழமைகளிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் யாகத்தீ வளர்த்து பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமத**த்துக்குரிய அருளூறு பூசைகளைச் செய்ய வேண்டும்.

இந்தப் பூசைகளில் வியாழக் கிழமையில் குருதிப் பலியும் இறைச்சிப் படையலும் பயன்படுத்த வேண்டும். ஞாயிற்றுக் கிழமையில் கிடைக்கக் கூடிய பசுமையான பழங்களையோ, சர்க்கரை கல்கண்டு பஞ்சாமிர்தம், சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், ... முதலியனவற்றில் வசதி வாய்ப்புப்படி கிடைப்பனவற்றைப் படையலாகப் படைத்து பரிகாரப் பூசைகளைச் செய்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு எலுமிச்சம்பழங்கள் மந்திரித்துக் கொடுத்து 11 (பதினோரு)

வாரம் முதல் 48 வாரம் வரை தொடர்ந்து வரச்சொல்லி எளிமையான பரிகாரங்களைச் செய்ய வேண்டும்.

அதாவது மந்திரித்துக் கொடுக்கும் எலுமிச்சம்பழங்களில் ஒன்றை வீட்டிற்குள்ளும், மற்றொன்றை வீட்டிற்கு வெளியிலும் நூலில் கட்டித் தொங்க விடச் சொல்ல வேண்டும். மறுவாரம் அவை இரண்டையும் எடுத்து வந்து யாகத்தில் போட்டு விட்டு புதிதாக வாங்கி வந்து இரண்டு எலுமிச்சம்பழங்களை மந்திரித்துச் செல்ல வேண்டும். இப்படி, அருள் வழங்குவதில் பதினொரு வாரங்களுக்குள் சிறிதளவு கூட நலம் விளையவில்லை என்றால் அது பற்றி உடன் விவரமாக குருதேவருக்கு தெரிவித்தாக வேண்டும். அதன்பேரில் குருதேவர் நேரடியாகப் பூசை செய்து வேறு என்னென்ன புதிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்று தெரிவிப்பார்.

இந்த ஞாயிற்றுக்கிழமைப் பூசையில்தான் பெருவாரியான பொதுமக்களுக்கு அருள்வழங்கிட யாகத்தீ பயன்பட்டிடும். எனவே, யாகத்தீ வளர்க்கும் பொழுது கட்டாயமாக ஏதேனும் ஒரு குருதிப்பலி கொடுக்கப்படல் வேண்டும். அதைச் சமைத்து அருள் வழங்கும் பணி நிறைவு பெறும்போது **(அனைவருக்கும் மந்திரித்து அருள் வழங்கிய பிறகு) படையலாகப் படைத்துத்தான் பூசையை முடிவு செய்ய வேண்டும். ஆனால், பலியை, இறைச்சியுணவை விரும்பாதவர்களை யெல்லாம் அனுப்பி விட்ட பிறகே இந்தப் படையலைப் படைத்துப் பூசையை முடிக்க வேண்டும்.**

இதுபோல், ஞாயிற்றுக் கிழமைகளில் அருள்வழங்கும் பூசை எல்லா இடங்களிலும் நிகழ்த்தப்படல் வேண்டும் என்று கபாடபுரத்துக் கருவூரார், அமராவதியாற்றங்கரைக் கருவூரார், தாத்தா விண்வெளி இயந்திர மனிதர், தாத்தா **கிருதி (கீர்த்தி)**, சித்தர் ஏளனம்பட்டியார், சித்தர் காகபுசுண்டர் ம.பழநிச்சாமி பிள்ளை மற்றும் அருளுலகத்தார்கள், பொருளுலகத்தார்கள் அறிவிப்புச் செய்கிறார்கள். இதனையே

குருவாணையாக வழங்குகிறார் நமது அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள்.

7) அன்பு கூர்ந்து காவிரியாற்றங்கரையிலுள்ள அழகுநாச்சியம்மனுக்கு இப்போது ஒரு பெரிய நீண்ட சதுர வடிவில் கற்களை வைத்து உண்டாக்கி யிருக்கின்ற மேடையை அப்படியே சுற்றிலும் செங்கற்கள் வைத்து தரையிலிருந்து குறைந்தது மூன்று முழ உயரமுள்ள மேடையாகக் கட்டி சிமெண்ட்டு பூசிவிடுங்கள். அப்பொழுதுதான் நாம் உட்கார்ந்து பூசை செய்யவும்; நமது இயக்கத்தவர்கள் பகலிலும் இரவிலும் அமர்ந்து தவம் செய்யவும் அந்த மேடை பயன்படும். இதற்கென்று ஓர் **அறங்காவலர் குழுவை** நியமித்து இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சார்பாக **மெய்யான இந்துமத** மரபுப்படி பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் தலைமையில் அழகுநாச்சியம்மன் பால்குட விழா நடக்கவும்; விரைவில் சித்தர்நெறிப்படி அழகு நாச்சியம்மனுக்கு ஒரு ஞானபீடம் கட்டித் தனியாகக் குடமுழுக்கு விழா செய்யவும் ஏற்பாடுகள் செய்யுங்கள்.

அறங்காவலர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கையாக அச்சிட்டு முசிறி வட்டாரத்திலும், மற்ற வட்டாரங்களிலும் வழங்கிடுங்கள். இது தொடர்பாக எந்தவிதமான கருத்து மாறுபாடுகளும், போராட்டங்களும் உருவாகிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதேபோல் நாம் யாகசாலை வைத்து அ.வி.தி. பணியாற்றுகின்ற இடத்திற்கு **‘சித்தர் அருட்கோட்டம்’** என்று பெயர் வைத்து ஓர் அறங்காவலர் குழுவையும் உருவாக்கிடுங்கள். அப்பொழுதுதான் நாம் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.

8) தங்களுக்கு நமது சித்தரடியார் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியார் M.R.சீனிவாசன் அவர்களைத் திருவோலை நாயகமாக நியமித்து நகலெடுக்கும் பணியையும், குருதேவருக்கு அஞ்சல் எழுதும் பணியையும் ஒப்படையுங்கள். இதேபோல் நமது சித்தரடியார் ஐயப்பசாமி பத்தர் (ரேடியோ கடைக்காரர்), ஆசிரியர்

கிருட்டிணமூர்த்தி அவர்களையும் திருவோலை நாயகமாக நியமித்து யார்யாருக்கு என்னென்ன அருட்பட்டங்கள் இதுவரை வழங்கப் பட்டிருக்கின்றன? அவர்களின் முழுமுகவரி என்ன என்ற முழு விவரங்களையும் உடனே தயாரித்து அனுப்புங்கள்.

அத்துடன், சீனிவாசநல்லூர் குரங்காண்டார் கோயிலிலும், தொட்டியம் மருதக்காளி கோயிலிலும், குலக்குடி எழுவாண்டியம்மன் கோயிலிலும், அமராவதியாற்றங்கரைக் கருவூருருக்குரிய கரூர்ப் பசுபதீசுவரர் ஆலயத்திலும், திருச்சி உச்சிப் பிள்ளையார் கோயிலிலும், தாயுமானவர் சன்னதியிலும், ஆத்தாள் தேவி மட்டுவார்குழலம்மை திரு முன்னரும், ஆத்தாள் தேவி சமயபுரம் மாரியம்மன் ஆலயத்திலும், ஆத்தாள் சிறுவாச்சியூர் மருதக்காளி ஆலயத்திலும், ஆத்தாள் தேவி நார்த்தாமலை மாரியம்மன் ஆலயத்திலும் நம்மவர்கள் சிலராவது திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி முதலியவைகளை ஏந்தி சன்னிதான உடையில் சென்று பூசைகளைச் செய்து மக்களுக்கு அருள்வழங்கும் செய்திகளை விரிவாக எழுதியனுப்பும்படியும் கூறுங்கள். அதாவது, இரண்டாவது திருவோலை நாயகமாக நியமிக்கப்படும் சித்தரடியார் கிருட்டிணமூர்த்தி அவர்கள் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் குருதேவருக்குத் தெரிவிக்கும் பணியில் ஈடுபடட்டும்.

9) தங்களுடைய துணைவியார், திருமகள், க.பன்னீர்செல்வம் அவர்களின் துணைவியார், ஆறுமுகத்தின் துணைவியார், கிருட்டிணமூர்த்தியின் துணைவியார் முதலியவர்களின் மூலம் திருச்சி மாவட்ட வார வழிபாட்டு மன்றம், இந்து மறுமலர்ச்சி இயக்கம், அ.வி.தி. அமைப்பு முதலியவைகளின் மகளிர் அணியை உண்டாக்குங்கள். இவற்றின் மூலம் பெண்களை அருளாளர்களாக்கி, மக்களுக்கு மந்திரித்து அருளை அநுபவப் பொருளாக வழங்கி, **மெய்யான இந்துமத**த்தின் மூலம்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்; மனித வாழ்விலுள்ள அனைத்து வகையான இன்னல்களையும், இருள்களையும் அகற்ற முடியும்; உலகச்

சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்க முடியும்; மந்திறவாதிகளிடம் இருந்து உலக மக்களைக் காப்பாற்ற முடியும்; மந்திறவாதிகளால் கட்டப்பட்டிருக்கும் அனைத்துத் தேவதைகளையும், தெய்வங்களையும் விடுதலை செய்ய முடியும் என்ற பேருண்மைகளை அனைவரும் உணரும்படிச் செய்யுங்கள்.

இதுதான் நமது இயக்கத்தின் மலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், ஆட்சி உயர்ச்சிக்கும் வழியாகவும், வாயிலாகவும் அமைந்திடும். எனவே, அன்பு கூர்ந்து இன்று 22/6/86இல் எழுதி அனுப்பப்படும் இந்தத் திருவோலையின்படி விரைந்தும் விரிந்தும் செயல்படுத்துங்கள். அடிக்கடி பதில் எழுதுங்கள். இந்த அஞ்சலை உடனே இரண்டு பேறு நகல்கள் எடுத்து குருதேவருக்கு அனுப்புங்கள். பிறகு 1+1 = 2 என்று குறைந்தது பத்து நகல்களாவது எழுதி முசிறி வட்டாரத்திலும், திருச்சி மாவட்டத்திலும் உள்ளவர்களுக்கு வழங்குங்கள். பிறகு இதன் நகலை குருகுலம், தஞ்சை, சேலம், வேம்படிதாளம், சிறுமுகை, ஈரோடு, மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி முதலிய இடங்களுக்கு அனுப்பிக் கொண்டேயிருங்கள். தேவையான அறிமுகம் கிடைக்கும்.

<u>திருவோலை நாயகம்</u>: சித்தரடியார் சண்முகானந்தன்.

<u>ஒப்பம்</u>: ஞாலகுரு சித்தர் கருவூரர், அருளாட்சி நாயகம்.<br>22/6/86.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா.சண்முகானந்தன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. ஒரு தாளின் இருபக்கமும் எழுதப்பட்ட கார்பன் நகலிலிருந்து புகைப்பட நகல் எடுக்கப்பட்டதாலும், ஆண்டுகள் பலவாகி விட்டதாலும் எழுத்துக்கள் மிகவும் குழம்பித் தெரிந்தன.//**

# அனைத்து மதங்களுக்கும் மூலக் கோயில் இந்துமதக் கோயிலே!

சென்னை-11,
9.3.86. 1:00AM.

ஓம் தாத்தாக்களே ஆத்தாக்களே போற்றி!
ஓம் பராசத்தி நமசிவாய போற்றி!
ஓம் நமசிவாய பராசத்தி சிவாயநம!
ஓம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறாரே போற்றி!

(1) பேரன்புடைய PMU அகமது ஹீசைன் (K.P.M. Uthuman Mohideen & Co, Scrap Iron merchants, New No.7, Mannady Street, Madras-600001) அவர்கள் சமூகத்துக்கு, அருள்மிகு ஞானாச்சாரியார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குவலய குருபீடம், ஞாலகுரு சித்தர் கருவூறார், அருளாட்சி நாயகம் அவர்களின் அடியான் அருளாட்சி ஓலைநாயகம் அருள்மிகு சித்தரடியான் தொட்டியம் மருதக் காளி சன்னிதானம் பெ.சௌந்தரராசன் B.E., எழுதும் குருவாணை பெற்ற அஞ்சல்:

(2) அன்பரே! தாங்கள் நண்பர் பா.மோகன் (எம்.ஜி.ஆர். நகர்) அவர்களின் மூலம் எங்களுக்கு அறிமுகமானதால் இப்புரிமுக அஞ்சல் தங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆர்வமுள்ளவர் என்பதால் பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமத**த்தின் (43,73,086 ஆண்டு காலத்தியது) மறை முறை நெறி வேதங்களையும், சாத்திற தோத்திற சம்பிறதாயங்களையும், பூசை தவம் வேள்விகளையும், ஆரண ஆகம மீமாம்சைகளையும், நேம நியம நிட்டைகளையும், புதைக்காடு சுடுகாட்டுப்

பூசைமுறைகளையும் ... அடிப்படையாகக் கொண்ட பத்தி நிலைகளையும், சத்தி நிலைகளையும், சித்தி நிலைகளையும், முத்தி நிலைகளையும்; தத்துவ வித்துக்களாகவும், செயல்நிலைச் சித்தாந்தங்களாகவும் அறியலாம்! புரியலாம்! வாரீர்! என வேண்டுகோள் விடுக்கிறோம்! புரிந்திடுங்கள்.

(3) பேரார்வமுடையீர்! தாங்கள் எங்களுடைய குருதேவர், அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், ஞாலகுரு, ஞானகுரு ..... அவர்களின் 18 ஆண்டு பயிற்சிக் கால சோதனைகளையும், 18 ஆண்டு முயற்சிக் காலச் சாதனைகளையும், அமைக்கப் போகும் அருளாட்சித் திட்டங்களையும் ... பற்றிய அரிய பெரிய பேருண்மைகளை அவர் உருவாக்கிய ஆயிரமாயிரம் அடியான்களில் ஒருவரான சித்தரடியார் பா.மோகன் அவர்கள் மூலம் ஓரளவு தெரிந்தும்! புரிந்தும்! இருப்பீர்கள். எனவே, தாங்கள் சென்னையில் வசிப்பவர் என்பதால், எங்கள் தலைமைப் பீடத்திற்கு (சித்தர் கருவூரர், ESI குடியிருப்பு, சென்னை-11) நேரில் வந்து எமது குருதேவரைச் சந்தித்து அருளார்ந்த அறிவுரைகளையும், அறிவார்ந்த அருளுரைகளையும் தங்களின் உளப் பக்குவநிலைக்கேற்ப பெற்று அருட் தொண்டாற்றலாம். அனைத்தும் தங்களின் விருப்பமே!

(4) உலகில் தோன்றிய அனைத்து மதங்களும், பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**தின் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் மக்களிடையே செயல்படுத்தப்படும் போது வெவ்வேறு பெயர் கொண்டு தோன்றிட்டன. எனவே, அனைத்து மதங்களுக்கும் மூலக் கோயில் இந்துமதக் கோயிலே! அனைத்து மொழிகளும் அண்டபேரண்டமாளும் தெய்வீக அருட்சத்தி கொண்ட தீந்தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டே படைக்கப்பட்டன. எனவே, அனைத்து மொழிகளும் தெய்வம், ஆண்டவர், பட்டவர், கடவுள், இயவுள், ... தேவகுமாரர், எல்லா (அல்லா), ... கணபாடிகள் ... எனப்படும் 48 வகை வழிபடுநிலையினர்களை வணங்கி வாழ்த்துப் பெற்று அருளாளர் நிலையை அடையத் தகுதியுடையனவையே.

எம்மொழியும் மாற்று மொழி மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தும் உரிமையில்லை என்பது போல; எம்மதமும் மாற்று மதத்தோடு போட்டியோ, பொறுமையோ, வீணான தத்துவக் குழப்பங்களையோ வளர்த்துக் கொள்ளும் இழிநிலை, பழிநிலை, அழிநிலை, அவலக் கேவலநிலை ... வேரோடு அகற்றப்பட வேண்டும்! அகற்றப்பட வேண்டும்! அகற்றப்பட வேண்டும்! அகற்றப்பட்டேயாக வேண்டும்.

(5) எனவே, **மெய்யான இந்துமத** வாழ்வியல் நெறியே இம்மண்ணுலக உயிரினப் பயிரினத் துன்பங்களைப் போக்கி; உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும், சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் உருவாக்கும் அநுபவப் பூர்வ சமூக விஞ்ஞானம் என்பதைத் தாங்கள் உணர்ந்து; சித்தர் நெறியில் செயல்படத் துடிக்கும் தங்களின் அலைகடல் ஆர்வத்தை வரவேற்று; இவ்வஞ்சலை விரிவஞ்சி நிறைவு செய்து வாழ்த்துகிறோம்.

அன்பு

**சித்தரடியான் பெ.சௌந்தரராசன்.**

9/3/86.

வெ.செகதீசன்.

அருட்செல்வ!

தங்களின் அஞ்சல்கள் கிடைத்தன!

இந்த அகமது உசைன் என்ற இசுலாமிய நண்பருக்கு உள்நாட்டு அஞ்சல் ஒன்று எழுதி வாழ்த்துக் கூறுங்கள்.

அன்பு

சித்தரடியான் பெ.சௌந்தரராசன்.

9.3.86.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# இலைமறை காய் நிலை

..... நமது குருதேவர், "... விஞ்ஞான உலகத்தின் சாதனைகள் எல்லோரும் அறிய, புரிய, பயன்படுத்திட முடிவது போல்; மெய்ஞ்ஞானத்தின் சாதனைகள் எல்லோராலும் அறிய, புரிய, பயன்படுத்திட முடியாமல் இருக்கின்ற குறையை நிறை செய்கின்ற வரை எத்தனையாயிரம் அடியான்களும், அடியார்களும் தோன்றினாலும் கூட எல்லோருமே இலைமறை காய்களாகத்தான் இருக்க வேண்டும்.

"இன்றைய விஞ்ஞானத்தின் அரிய பெரிய சாதனைகள் பல மெய்ஞ்ஞானத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், கருத்துக்களையும், நம்பிக்கைகளையும், ... மெய்யென மெய்ப்பித்து நிலைநாட்டியுள்ளன. அதாவது கைரேகைச் சாத்திறம் ஒவ்வொரு மனிதனையும் அடையாளம் காட்டக் கூடியது என்பதை குற்றவியல் துறையில் அறிவியல் வளர்ச்சி (The inventions of the criminology department) மெய்ப்பித்து விட்டது. தொலை ஒலி உணர்தல், தொலைக்காட்சி (Radio and Television) ... முதலியன விஞ்ஞானத்தின் சாதனைகளால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இதுபோல் பல.

"எனவே, சத்திகளையும், சித்திகளையும் பெறக் கூடிய தெய்வீகக் கலைஞர்கள் தங்களால் இயன்ற அளவு ஆங்காங்கே வட்டாரங்களில் அருள் வழங்கு செல்வர்களாகச் (Divinators) செயல்பட்டே சித்தர் நெறியின் வாழ்வியல் பயன்களை (The usages for day to day life of the Siddharism) உலகிற்கு விளக்கிட்டால் போதும் ... என்ற பதிலையே கூறி வருகின்றார். .....

**//குருதேவர் கூறி 11-03-1980இல் எழுதப்பட்ட அஞ்சல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கருத்து.//**

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவரின் ஒரு வரிக் கருவாசகங்களில் சில:

*"தாய்மொழியே பெய்யும் மழை."*
*"தாய்நாடே உய்ய வைக்கும் தெய்வம்."*
*"முன்னோர்களை ஆழ நினைத்து வழிபடலே வழிபாடு."*
*"தமிழே இந்துமதம்."*
*"தமிழின ஒற்றுமையே இந்துமதம் காக்கும்."*

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

---


Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Circulated by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
(Not sent for printing due to COVID-19 lockdown.)



https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com